சர்வதேச பரப்புரையில் வைகோவும் விதாரணவும்

இதயச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

ஆளும் கட்சிப் பிரதிநிதிகளை, சர்வ கட்சிக் கூட்டமாகச் சித்தரிக்கும் மரபு, சிறீலங்கா ஜன நாயகத்திற்கு கைவந்த கலை. அதை ஏற்றுக் கொள்வதே, உலக ஜனநாயகவாதிக லின் கடமையாகின்றது. இக் கூட்டத்தின் தலைவர் தான், மெத்தப்படித்த அறிவுஜீவியான பேராசிரியர் திஸ்ஸவிதாரன.

60களில் தோசை, மசாலாவடை விற்று இன வாதம் பேசிய, லங்கா சமசமாஜ கட்சியின் தற்போதைய காப்பாளரே இவர். பொதுவுடமை சித்தாந்தம் பேசும் கட்சியென்கிற வியாக்கியான விளக்கங்களும் அதற்குண்டு. இவர் கைகளில் மகிந்த திணித்த இருபக்க 13வது திருத்தச் சட்டத்தை, தீர்வாக முன்வைத்தவர், இப்போது புதிய கதைகளைக் கூறத் தொடங்கியுள்ளார்.

தேசத்தின் குரலோடு பல சுற்றுப்பேச்சுவார்த் தைகளில் கலந்து கொண்ட தத்துவக் கோட் பாட்டுக் கோமான் ஜீ.எல். பீரிசிற்கு அடுத்ததாக, சிங்களத்தால் களமிறக்கப்பட்டவரே இந்த சர்வ கட்சித் தலைவர்.

தான் வைக்கும் தீர்வுத் திட்டங்களை மகிந்தர் எற்றுக்கொள்ள மறுப்பதால், அவருடைய இராணுவ நகர்வுகளோடு ஒத்துப் போவதே தனது இருப்பினைத் தக்கவைக்குமென விதாரண விரும்புகிறார். அண்மையில் இலண் டனிலுள்ள வானொலிக்கு இவர் அளித்த நேர்காணலில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான மகிந்தரின் இராணுவ நடவடிக் கைகளுக்கு நியாயம் கற்பித்தார்.

இராணுவ வழித் தீர்வினை அரசு முன்னெ டுக்கும் பொழுது, சர்வகட்சிக் கூட்டங்களின் தீர்வுத் திட்டங்கள் தேவையற்றதொன்றென விதாரணவும் புரிந்து கொள்கிறார் போல் தெரிகிறது. ஆனாலும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இவ்வகையான தீர்வு நாடகங்கள் அரங்கேற்றப்படுவதனை கடந்த காலங்கள் பதிவாக்கியுள்ளன. நிரந்தர தீர்வு பற்றிப் பேசுபவர், இராணுவ நடவடிக்கைகளை நியா யப்படுத்துவது, சிங்கள புத்திமான்களின் இன வாத ஆளுமையையே வெளிப்படுத்துகிறது.

இரட்டை வேடமும், பிளவுபட்ட ஆளுமையும் கொண்ட சிங்கள தேசத்தின் பேரினவாதக் கருத்தியல், மாறா நிலை கொண்ட மகாவம்ச கருத்துவருவமென்பதை, தமிழ்மக்கள் புரிந்து கொண்ட அளவிற்கு, சர்வதேசம் புரிந்து கொள்ளவில்லையென்பதே சோகமானது.

இரட்டை வேடமும், பிளவுபட்ட ஆளுமையும் (SPLIT PERSONALITY) கொண்ட சிங்கள தேசத்தின் பேரினவாதக் கருத்தியல், மாறா நிலை கொண்ட மகாவம்ச கருத்துவருவமென்பதை, தமிழ்மக்கள் புரிந்து கொண்ட அளவிற்கு, சர்வதேசம் புரிந்து கொள்ளவில்லையென்பதே சோகமானது.

புரியாததுபோல் நடித்து, தமது பிராந்திய நலனை முன்னிலைப் படுத்துவதே வல்லர சாளர்களின் கோட்பாடு ஆகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இனிச் சந்தர்ப்பமே கிடையாதென்பதை, அவர்கள் ஏற்கனவே அனுமானித்துவிட்டார்கள்.

பீரிஸ், விதாரண வரிசையில் தற்போது, தயான் ஜெயதிலக என்கிற முன்னாள் மாக்சிசவாதியும் இணைந்துள்ளார். இந்நபர், ஜெனீவாவிலிருந்து விடும் அதிரடி அறிக்கை களால் மேற்குலகம் அதிர்ந்துள்ளது.

90வீதமான தீர்வுத் திட்டம் வரையப்பட்டுவிட்டதாம். மீதமுள்ள 10வீதத்தினை நிறைவு செய்யவே, வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்டு, அந்நாடுகளிலுள்ள அரசியலமைப்பு வடிவங்களை ஆராயப் போவதாக நீளமான கயிறொன்றும் விடப்பட்டுள்ளது.

பிடல் காஸ்ரோவின் வாரிசாகத் தன்னை உருவகப்படுத்தும் இவர் ஈழப்பிரகடனம் செய்த வரதராஜப்பெருமாளின் அரச சபையில் மந்திரிப்பதவி வகித்தது பலருக்குத் தெரியாது. உலகில் பரவலாகப் பேசப்படும் முன்னணித் தத்துவங்கள் இரண்டை, அலசி ஆராய்ந்து, கலாநிதிப் பட்டம் பெற்றவுடன் அரியாசனக கனவுகளும், தாம் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டுமென்கிற முனைப்பும் இவர்களிடம் தொற்றிக் கொள்கிறது.

எம்மிடையே உலாவரும், உலகறிந்த பிரம்மாக்கள் பலர், இவ்வகையான மனோ வியாதிகளால் பீடிக்கப்பட்டு, பரதக்கலையை தாசிகுலமே உருவாக்கியதாக, தமது புதிய கண்டு பிடிப்புக்களை உதிர்த்துவிடுகின்றனர்.

சமூக மாற்ற வரலாற்றியலில், இடையில் வந்த மன்னராட்சிக்கால தாசிகுல அமைப் பிற்கு முன்பாகவே பரதக்கலை நிலை பெற்றிருந்ததை இப்புத்திஜீவிகள் தெரிந்து கொள்ளவில்லை. இதேபோன்று, மேற்குலகின் ஏகாதிபத்திய நிலைப்பாடுகளை விமர்சித்து, சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்புக் கொடூரங்களை மூடி மறைத்திட, தயான் ஜெயதிலக போடும் இரட்டை வேடங்களால் மகிந்தரே அதிர்ச்சியடைந்துள்ளார்.

சர்வதேசம் குறித்த காட்டமான விமர்சன ங்கள் யாவும், கொழும்பிலிருந்தே இனி வெளிவர வேண்டுமென எச்சரித்து, ஜெனீவா முனிவரின் வாயை அடைத்துள்ளார் மகிந்தர். இந்த முனிவரின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போதனைகளால் சினங்கொண்ட மேற்குலகின் எதிர்ப்பினைத் தணிக்க, தீர்வுத் திட்ட வரைகலைக் கலைஞர் திஸ்ஸ விதராணவை ஐரோப்பாவிற்கு அனுப்பியுள்ளது அரசு.

ஒற்றையாட்சியும் சம்ஷடியும் இணைந்த, புதிய தத்துவமொன்றைத்தான் முன் வைக்கப் போவதாக மேற்குலகின் காதுகளில் பூச்செருக முற்படுகிறார் விதாரண. 90வீதமான தீர்வுத் திட்டம் வரையப்பட்டுவிட்டதாம். மீதமுள்ள 10வீதத்தினை நிறைவு செய்யவே, வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்டு, அந்நாடுகளிலுள்ள அரசியலமைப்பு வடிவங் களை ஆராயப் போவதாக நீளமான கயிறொ ன்றும் விடப்பட்டுள்ளது.

சரத்பொன்சேக்காவின் புலி அழிப்புக் காலக்கேடு போன்று, விதாரணவின் தீர்வுத்திட்ட ஒப்படைப்புத் திகதியும் நீண்டு செல்கிறது.

ஐரோப்பாவிற்கான ஆடை ஏற்றுமதி ஒப்பந்த தினம் வரும்வரை விதாரணகளின் மேற்குலக வலங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். அதா வது சீனாவிடமிருந்து முழுமையான அங்கீ காரமும், பாதுகாப்பும் பெறப்படும் வரை இந்தியாவையும் மேற்குலகையும் அரவ ணைத்துச் செல்லும் இராஜதந்திர உத்தி யையே மகிந்தர் முன்னெடுத்துச் செல்வார். ஆயினும் மகிந்தரின் சர்வதேசப் பரப்புரை க்கு எதிராகக் களமிறங்கியுள்ள வைகோவின் அதிரடி நகர்வுகளால் சிங்களம் கலக்க மடைந்துள்ளது.

நோர்வே மாநாட்டுக்குச் சென்ற வைகோ அவர்கள், ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்திக்க நியுயோர்க் செல்கிறார். தூங்கிக் கிடந்த சிறீலங்காத் தூதரகங்கள் தற்போது செயற்படத் தொடங்கியுள்ளன.

தாயக உணர்வாளர்கள் நடாத்தும் மாநாடுகளை, ஒன்று கூடல்களைத் தடுத்து நிறுத்த இத்தனை காலமும் ஒடித்திரிந்த தூதரக முனிவர்கள், தனிநபர்களின் வருகையையும் இடைமறிக்க படாதபாடு படுகிறார்கள்.

தாயக உணர்வாளர்கள் நடாத்தும் மாநாடு களை, ஒன்று கூடல்களைத் தடுத்து நிறுத்த இத்தனை காலமும் ஓடித்திரிந்த தூதரக முனிவர்கள், தனிநபர்களின் வருகையையும் இடைமறிக்க படாதபாடு படுகிறார்கள்.

இவர்களுக்கு உறுதுணையாக, சில தாயக எதிர்ப்புத் தீவிரவாதிகள் சிறீலங்கா தூதரங்களில் முகாமிட்டு, சிங்களத்தை வழிநடாத்திச் செல்வதாகவும் அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

ம.தி.மு.க. செயலாளர் வை. கோபால்சாமி அவர்கள், தீவிர விடுதலைப் புலி ஆதரவாளர் என்பதைப் புரிந்தும், நோர்வே மாநாட்டில் அவர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட நிகழ்வு, மறுதலையையும் சர்வதேசப் பார்வை குறித்த கலக்கத்தை அரசிற்கு உருவாக்கி யுள்ளது.

களத்தில் உருவாகும் படைவலுச் சமநிலை போன்று சர்வதேசப் பரப்புரையிலும், இருதரப்புச் சமநிலை தோற்றமுறுவது போல் தெரிகிறது. இந்நிலையைப் பேணுவதும், அதனையும் தாண்டி மேலெழுந்து செல்வதும் புலம் பெயர் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஓவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**